காலநிலை மாற்றத்தினால் வானிலை கணிப்புகளைவிட அதிக மழை கொட்டியது

தமிழக அரசின் முன்எச்சரிக்கை நடவடிக்கையால் மழை வெள்ள உயிர்ச்சேதம் தவிர்ப்பு: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

வானிலை கணிப்புகளைவிட அதிக மழை கொட்டி இருக்கிறது. இருந்தாலும், தமிழக அரசின் முன்எச்சரிக்கை நடவடிக்கையால் உயிரச்சேதம் தவிர்க்கப்பட்டது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

சென்னை, டிச.5–

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1,383 கோடி மதிப்பிலான 79 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, 29 முடிவுற்ற திட்டப்பணிகளுக்கு தொடக்க விழா ஆகியவை சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள தண்ணீர் தொட்டி பகுதியில் நேற்று மாலை நடந்தது. அமைச்சர் சேகர்பாபு வரவேற்றார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகித்தார்.

அதில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளையும் திறந்து வைத்தார்.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில் கூறியதாவது:– காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் வானிலை கணிப்புகளைவிட அதிகமான மழை கொட்டி தீர்த்து இருக்கிறது. இந்த நிலை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டு இருக்கிறது. எல்லா நாட்டிலும் நடப்பது தான் என்று நாம் அலட்சியமாக இருந்ததில்லை. நாங்கள் முன்எச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததால் உயிரிழப்புகள் பெரிதும் ஏற்படவில்லை என்பது முக்கியம். ஆனால் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில்அதிகமானஅளவிற்கு மழை பெய்து, பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை, நிவாரணத்தை மழை தொடங்கியதில் இருந்து இப்போது வரைக்கும் தமிழ்நாடு அரசு செய்துகொண்டுதான் இருக்கிறது. மத்திய அரசிடம் இருந்து நிதியும் கேட்டு இருக்கிறோம். விரைவில் இந்த பாதிப்பில் இருந்து நிச்சயமாக நாம் மீண்டு வருவோம்.

மழை, வெள்ளத்தில் தவித்த சென்னையை மீட்டெடுத்திருப்பது போன்று, மற்ற பகுதிகளையும் விரைவாக மீட்டெடுப்போம். ஒட்டுமொத்த தமிழ்நாடும் மீண்டு வரும். இப்போதே சில மாவட்டங்கள் முழுமையாக மீண்டு வந்து கொண்டிருக்கிறது. அல்லல்படும் மக்களின் வேதனையில் அவதூறு பரப்பி ஆதாயம் தேடலாமா என்று சிலர் மலிவான அரசியலில் ஈடுபடுகிறார்கள்.

விடியலைத் தருவதுதான் உதயசூரியன்

கடந்த ஆட்சியில் 2015ம் ஆண்டு செயற்கை வெள்ளத்திலும், பல்வேறு புயல்களிலும் சென்னையை வெள்ளத்தில் மிதக்கவிட்டது போன்று, இப்போது நாங்கள் தவிக்கவிடவில்லை. நாங்கள் எடுத்த நடவடிக்கையால் மழை நின்ற அடுத்த நாளே சென்னை மீண்டு இருக்கிறது.

மழை நின்ற உடனே நான் கொளத்தூர் தொகுதியை பார்வையிட்டபோது, அங்கிருந்த ஒரு பெரியவர் இந்த நகருக்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது என்றார். விடியலைத் தருவதுதான் உதயசூரியன். ஆனால், உதயசூரியன் என்றாலே கண்கள் கூசும் ஆட்களுக்கு விடியல் என்றால் தெரியாது. விடியவில்லை. விடியவில்லை. விடியா ஆட்சி என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள்.

தமிழ்நாட்டை படுபாதாளத்திற்கு தள்ளிய அந்த விடியா முகங்களுக்கு என்றைக்கும் விடியவே முடியாது. அது விடியவும் விடியாது. அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எவ்வளவு மழை பெய்தாலும் முதலமைச்சர் தொடங்கி, துணை முதலமைச்சர், அமைச்சர்கள் என்று அனைவரும் களத்தில் வந்து நிற்கிறார்கள். நிவாரண உதவிகளை செய்கிறார்கள். நம்மால் அரசியல் செய்யமுடியவில்லை என்று இப்போது தவிக்கிறார்கள்.

எவ்வளவு பெரிய மழை பெய்தது. அடுத்தநாளே இன்றைக்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறோம் என்றால், அதைத்தான் நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். வள்ளலார், நம்முடைய சென்னையை 'தருமமிகு சென்னை' என்று சொல்வார். "இந்த ஊருக்கு வந்தால், நிச்சயம் நம்முடைய வாழ்க்கையும், குடும்பமும் முன்னேறிவிடும்" என்று நம்பி வந்தவர்களை சென்னை எப்போதும் கைவிட்டது இல்லை. என்னை தலைமைச் செயலகத்தில் சந்திக்க வரும் வெளிநாட்டு தூதுவர்கள், "சென்னை நகரம் இப்படி வளர்ச்சி அடைந்ததற்கு நீங்கள்தான் காரணம்" என்று சொல்வார்கள். அதனை கேட்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

பிற மாவட்டங்களிலிருந்து வந்த நிவாரண பொருட்களை விழுப்புரம் முகாம்களுக்கு பிரித்து அனுப்பும் பணி: கூடுதல் தலைமை செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆய்வு

விழுப்புரம், டிச. 5– விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள வியாட்டரங்கில், பெஞ்ஜல் புயலால் பாதிக்கபபட்ட மக்களுக்கு பிற மாவட்டங்களிலிருந்து வரப்பெற்ற நிவாரண பொருட்களை நிவாரண முகாம்களுக்கு பிரித்து அனுப்பும் பணியினை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டத்தில் தொடர் கனமழை பெய்து வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. பெஞ்ஜல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில் மதுரை, சென்னை, திருச்சி, கரூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்து 9965 அரிசி மூட்டைகளும், 6004 பால் பாக்கெட்டுகளும், 11,780 குடிநீர் பாட்டில்களும், 43,262 பிஸ்கட் பாக்கெட்டுகளும், 11,050 மளிகைப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களும், 1000 துவரம் பருப்பு பாக்கெட்களும், 2000 பாக்கெட் சமையல் எண்ணெய்களும், 2350 நாப்கின்களும், 2362 போர்வைகளும், 1621 வேட்டி மற்றும் லுங்கிகளும், 283 துண்டுகளும், 1510 பாய்களும், 1000 போர்ச்சம் பழம் பாக்கெட்களும், 1500 பால்பவுடர் பாக்கெட்களும், 1800 குளிபான பாட்டில்களும், 560 மில்க் ஷேக், 4666 பிரட் பாக்கெட்களும், 100 எண்ணிக்கையிலான கொசுவலைகளும், 12000 ரஸ்க் பாக்கெட்களும், 1000 நைட்டிகளும், 3500 உணவு பொட்டலங்கள் வரப்பெற்று நிவாரண முகாம்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உரிய அலுவலர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தவகையில் விழுப்புரம் பகுதிக்கு 3500 உணவு பொட்டலங்களும், 3500 குடிநீர் பாட்டில்களும், வி.ஆர். எஸ் பொறியில் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு 1500 உணவு பொட்டலங்களும், 1120 பிரட் பாக்கெட்களும், திருவெண்ணெய்நல்லூர் வட்டத்திற்குட்பட்ட அரசூர் மற்றும் கீழ்தணியலாம்பட்டு பகுதி மக்களுக்கு 1050 அரிசி மூட்டைகளும், 1050 மளிகைப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களும், அரசூர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு 200 பாய், போர்வைகளும், 200 பிரட் பாக்கெட்களும், 160 உணவு பெட்டகங்கள் ஆகியவற்றை பாதிக்கப்பட்ட பகுதி பொதுமக்களுக்காக உரிய அலுவலர்கள் வாயிலாக வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. இந்த பணியினை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என். சுப்பையா ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் பா.பொன்னையா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு பலியான மின்வாரிய ஊழியர் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நிவாரணம்: ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, டிச.5–

திருவண்ணாமலையில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு பலியான மின்வாரிய ஊழியர் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த 1ந் தேதி இரவு பெஞ்ஜல் புயலால் திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டம், துணை மின் நிலையத்துக்குட்பட்ட அண்டம்பள்ளம் மின் மாற்றியில் மின்தடை ஏற்பட்டது. இதை சரி செய்யும் பணிக்காக, வெறையூர் பிரிவில் இருந்து மின்பாதை ஆய்வாளர் பாலசுந்தர் (வயது 56), கம்மியர் அண்ணாமலை (56) ஆகியோர் சென்றனர். இதில், அண்ணாமலை பவித்திரம் தரைப்பாலத்தை கடக்கும்போது எதிர்பாராதவிதமாக வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டு, காணாமல் போனதைத் தொடர்ந்து அவரை தேடியதில் கடந்த 3ந் தேதி அவர் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார் என்ற துயரமான செய்தியை கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

மின்சார வாரிய ஊழியர் அண்ணாமலை உயிரிழப்பு, தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அண்ணாமலையை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும், அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவரின் குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிடவும், உயிரிழந்த அண்ணாமலையின் குடும்பத்தில் தகுதியான நபர் ஒருவருக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மாநில திட்டக்குழு விரிவாக்கம்: உதயநிதிக்கு புதிய பதவி

சென்னை, டிச.5–

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் அலுவல் சாரா தலைவராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் மாநில திட்டக்குழு விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. அதற்கான அரசாணையை சமீபத்தில் தமிழக அரசு பிறப்பித்தது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் அலுவல் சாரா துணைத்தலைவராக நியமிக்கப்படுகிறார். திட்டம் மற்றும் மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக இருப்பதால், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு அந்த புதிய பதவி அளிக்கப்பட்டு உள்ளது.

ஏற்கனவே திட்டக்குழுவின் துணைத்தலைவராக செயல்பட்டு வந்த ஜெயரஞ்சன், இனி மாநில திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவராக செயல்படுவார். புதிய நடவடிக்கையாக, தலைமைச் செயலாளர் முருகானந்தத்தை அலுவல் சாரா உறுப்பினராக சேர்த்து அரசு உத்தரவிட்டுள்ளது.

AUTHUM

ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 707, ரஹேஜா சென்டர், பார் பிரஸ் ஜர்னல் சாலை, நாரிமன் பாயிண்ட், மும்பை 400 021. (022) 6747 2117 Fax: (022) 6747 2118 E-mail: info@authum.com

இணைப்பு IV A (விதி 8(6)ஐ பார்க்க | மின்னணு ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு (இணைப்பு IV A) (விதி 8(6))

ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (RHFL) அதன் கடன் வழங்குபவர்களால், ஜூன் 7, 2019 தேதியிட்ட RBI சுற்றறிக்கை எண். RBI/2018-19/ 203, DBR.No. BP. BC. 45/21.04. 048/2018-19படி அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத் திட்டத்திற்கு இணங்க, வகைப்படுத்தப்படாத சொத்துக்களைத் தீர்ப்பதற்கான விவேகமான விதிமுறை கட்டமைப்பின்படி, மார்ச் 3, 2023 தேதியிட்ட மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் மார்ச் 25, 2023 அன்று பங்குதாரர்களால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின்படி, RHFL தனது வணிகத்தை மொத்த விற்பனை மூலம் மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, அதன்படி ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு (இனி "RCFL" என குறிப்பிடப்படுகிறது) மேலும் கடன் வாங்குபவரின் கடன் கணக்கு (கள்) தொடர்பான அனைத்து உரிமைகளும் பொறுப்புகளும் RCFLக்கு மாற்றப்பட்டுள்ளன.

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (இனி 'சட்டம்' என்று குறிப்பிடப்படும்) ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் ("AIIL") (10.05.2024 தேதியிட்ட NCLT உத்தரவின்படி, ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் ("RCFL") AIIL க்கு கடன் வழங்கும் வணிகத்தை பிரித்ததன் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனம்) கார்ப்பரேட் அலுவலகம் : தி ரூபி, 11வது தளம், வட மேற்கு வியங், மனை எண். 29, ஜே கே சாவந்த் மார்க், தாதர், மும்பை 400 028. மற்றும் கிளை அலுவலகம்:_சாய் ஜேபிஎம் காம்ப்ளக்ஸ், 1வது தளம், டி எண் 536/1057, பி எண். 5, பூந்தமலி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை 600 1066ல் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. சட்டத்தின் பிரிவு 13(2) அறிவிப்புக்கு இணங்க பின்வரும் கடன் கணக்குகள்/புராஸ்பெக்டஸ் எண்களில் உள்ள கீழ்க்கண்ட அசையா சொத்து/களை ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (''AO'') சுவாதீனம் எடுத்துள்ளார். அந்த சொத்தானது ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டிற்கு சேர வேண்டிய நிலுவைத் தொகைக்காக ''உள்ளது உள்ளபடி எப்படி உள்ளதோ அப்படியே '' என்ற முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. www.bankeauctions.com என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மின்னணு ஏல தளம் மூலம் கீழே கையொப்பமிடப்பட்டவர்களால் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	சுவாதீனத் தேதி / மொத்த நிலுவைத் தொகை	ரிசர்வ் விலை / டேவணித் தொகை டெபாசிட் / ஏல அதிகரிப்புத் தொகை
(கடன் கணக்கு எண். RHHLCHE000056506 கிளை : சென்னை 1. சுந்தர் ஆர் பி எஸ் 2. சிந்து பரமேஸ்வரி	08.07.2021 & ரூ.50,94,386/- (ரூபாய் ஐம்பது லட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து முன்னூற்று எண்பத்தாறு மட்டும்) **தொடர்பு கொள்ள வேண்டிய நபர் திரு. சதீஷ் கிருஷ்ணன் போன் 9962747582** **ஏல அதிகரிப்பு ரூ. 15000/ஏலம்**	03.02.2023 நவம்பர் 28, 2024 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ.88,24,388/- (ரூபாய் எண்பத்தியெட்டு லட்சத்து இருபத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்தியெட்டு மட்டும்)	ரூ. 42,45,800/-(ரூபாய் நாற்பத்தியொன்று லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) டேவணித் தொகை டெபாசிட் (EMD) ரூ.4,24,580/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்)

அசையாச் சொத்து/ஈடுபெற்ற சொத்து விவரம்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எப்.எண். பி, கீழ் தளம், தபால் பெட்டி எண்.13, காமராஜர் தெரு விரிவாக்கம், அன்னை இந்திரா நகர், வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600042

சொத்தை பார்வையிடும் தேதி:	டேவணித் தொகை டெபாசிட் கடைசித் தேதி :	ஏலத் தேதி/நேரம் :
18 டிசம்பர் 2024 அன்று காலை 11:00 மணி முதல் 3:00 மணி வரை	23 டிசம்பர் 2024 அன்று மாலை 5:00 மணி வரை	24 டிசம்பர் 2024 காலை 11:00 மணி முதல் 13:00 மணி வரை

பணம் செலுத்தும் முறை: அனைத்து கட்டணங்களும் டிமாண்ட் டிராஃப்ட் அல்லது RTGS/NEFT மூலம் "ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்" என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில். கணக்கு விவரங்கள் பின்வருமாறு: a) கணக்கின் பெயர்: ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் CHD A/c, b) வங்கியின் பெயர்: HDFC Bank Ltd, c) கணக்கு எண்: 99999917071983 , ஈ) IFSC குறியீடு: HDFC0001119

ஆன்லைன் மின்னணு ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. செத்து "எங்கே உள்ளதோ, அங்கே எப்படி உள்ளதோ அப்படியே மற்றும் எந்தவித மாற்றமும் இல்லாமல்" விற்கப்படுகிறது. அத்தகைய விற்பனை எந்த விதமான உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் இருக்கும்.
2. மின்னணு ஏல பற்றிய விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் ஆன்லைன் ஏலம் குறித்து வருங்கால ஏலதாரர்கள் சேவை வழங்குனர் M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மனை எண் 68, 2வது தளம் பிரிவு 44 குர்கான் ஹரியானா 122003 (தொடர்பு எண். 7291981124,25,26)ஐ தொடர்பு கொள்ளலாம். உதவி மின்னஞ்சல் – Support@bankeauctions.com, திரு. பாவிக் பண்டியா மொபைல் எண். 8866682937. மின்னஞ்சல்: Gujarat@c1india.comல் தொடர்பு கொள்ளலாம்.
3. மேலும் விவரங்கள் மற்றும் கேள்விகளுக்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளவும்: திரு. தினேஷ் எம் மொபைல் எண். 8248800935/9962747582
4. மேலே குறிப்பிட்ட தேதி / இடத்தில் ஏல விற்பனையை நடத்துவது பற்றி இந்த வெளியீடு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) விதியின்படி மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர் / அடமானதாரர் / உத்தரவாததாருக்கு 15 (பதினைந்து) நாட்கள் அறிவிப்பு ஆகும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளத்தைப் பார்க்கவும் (குறியீடு: 182929ஐப் பயன்படுத்தவும் மற்றும் NIT ஆவணத்தைப் பார்க்கவும்) (https://www.bankeauctions.com)

இடம் : சென்னை ஒப்பம்/-
நாள் : 05.12.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

NAME CHANGE

Narangi Bai, Date of Birth: 13.09.1959, Aadhar No. 7290 8211 9255 residing at 6021, 6th Block, 2nd Floor, 127, Bricklin Road, Purasaiwakkam, Chennai - 600 007, shall henceforth be known as **Narangi Jain**.

Narangi Jain.

IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF AT CHEYYAR

I.A.No. 5 of 2024
In
I.A.No. 1 of 2022
in
I.A.No. 338 of 2018
in
O.S.No. 427 of 2000

1. P.S.Thirunavakkarasu
2.P.S.Shanmugam
..Petitioners/5th & 6th Defendants.
vs
1. Palani (Plaintiff), ...Plaintiff/ Respondent.
2. Selvaraj (Defendant-1-Deceased),
3. Mageswari (Defendant -2),
4. Anjalai (Defendant - 3),
5 Nagalakshmi(Defendant - 4),
6. Silambarasan (Defendant - 7)
7. Nivedhitha (Defendant-8)
..Respondents/Defendants
8.S.Senthamizhselvi, (Legal heir of 1st Defendant), ...Proposed legal heirs
9.S.Sasi, (Legal heir of 1st Defendant)
10.S.Kalai, (Legal heir of 1st Defendant)
....Proposed legal heirs... ...Respondents/8 to 10 Respondents are Legal heir of the 1st Defendant

In the above suit this Honble Court was pleased to order summons to R-9.P.Sasi D/o Late. Selvaraj, R-10 P.Kalai Dio Late P.Selvaraj, both are residing at Akkoour village, Cheyyar, T.K. Thiruvannamalai Dt. you c your Counsel will be appear in I.A. No.5 of 2024 in I.A. No. 1 of 2022 in I.A. No. 338 of 2019 in O.S.No. 42 of 2000 returnable by 18.12.2024. Therefore you are required to be present before the said court a 18.12. 2024 at 10.30.A.M. without fail Failing which the matter will be decide in you absence.

Advocate
C. Udhayakumar
Counsel for Petitioners / 5 & 6th Defendants.

SAPTARISHI™
Agro Industries Ltd

சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: படாளம் சுகர் பேக்டரி ரோடு, பழையனூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு 603 308. www.saptarishiagro.com | Saptarishi121@gmail.com
CIN: L15499TN1992PLC022192 | Contact No. 079-40306965

தபால் வாக்கு அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் ("சட்டம்") பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், ஏதேனும் இருந்தால் அவை உட்பட மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் விதிகள் 20, 22 மற்றும் இந்திய அரசாங்கத்தின் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ('MCA சுற்றறிக்கைகள்'), ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட 17/2020, மே 5, 2020 தேதியிட்ட 20/2020, 15 ஜூன், 2020 தேதியிட்ட 22/2020, 28 செப்டம்பர், 2020 தேதியிட்ட 33/2020, 31 டிசம்பர், 2020 தேதியிட்ட 39/2020, 23 ஜூன், 2021 தேதியிட்ட 10/2021, 8 டிசம்பர், 2021 தேதியிட்ட 20/2021 மற்றும் 5 மே, 2022 தேதியிட்ட 03/2022 மற்றும் 28 டிசம்பர், 2022 தேதியிட்ட 11/2022 மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் ஒழுங்குமுறை 44 மற்றும் இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலகத் தரநிலை ("SS-2") மற்றும் பொருந்தக்கூடிய வேறு ஏதேனும் சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ மாற்றங்கள்(கள்) அல்லது மறு அமலாக்கம்(கள்) உட்பட) ஆகியவற்றுக்கு இணங்க, விளக்க அறிக்கையுடன் ("அறிவிப்பு"), மின்னணு வழிமுறைகள் (அதாவது தொலைதூர மின்னணு வாக்களிப்பு) மூலம் மட்டுமே நவம்பர் 28, 2024 தேதியிட்ட தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சாதாரணத் தீர்மானத்தின் மூலம் சிறப்பு வணிகத்தின் மீது உறுப்பினர்களின் ஒப்புதலை நிறுவனம் கோருகிறது என்று சப்தரிஷி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் (''நிறுவனம்'') உறுப்பினர்களுக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் 29, 2024 வெள்ளிக்கிழமை ("கட்ஆஃப் தேதி") அன்று உறுப்பினர்களின் பதிவேடு / நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NDSL") மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு மற்றும் நிறுவனம் / டெபாசிட்டரிகளில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்தவர்களுக்கு விளக்க அறிக்கையுடன் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பின் ("அறிவிப்பு") மின்னணு நகல்களை அனுப்பும் பணி டிசம்பர் 4, 2024 அன்று நிறைவடைந்தது. எம்சிஏ சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள விலக்குகளுக்கு இணங்க, தபால் வாக்குச் சீட்டுப் படிவங்கள் மற்றும் முன்பணம் செலுத்திய வணிகப் பதில் உறைகள் ஆகியவற்றுடன் தபால் வாக்குச் சீட்டின் நகல்களும் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவதில்லை. தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆய்வுக்குக் கிடைக்கின்றன, ஆய்வுக்கு விரும்பும் உறுப்பினர்கள் saptarishi121@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

நிறுவனத்தின் இணையதளத்தில் அதாவது www.saptarishiagro.com மற்றும் பங்குச் சந்தைகள் அதாவது BSE Limited இன் www.bseindia.com மற்றும் CDSL இன் www.evotingindia.com என்ற இணையதளத்தில் அறிவிப்பு கிடைக்கிறது.

MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் மற்றும் அதன் விளைவாக தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பைப் பெற முடியாது.

சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") வழங்கும் மின்னணு வாக்களிப்பு சேவைகள் மூலம் மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையை உறுப்பினர்களுக்கு நிறுவனம் வழங்குகிறது. மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான வழிமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி பின்வரும் காலக்கட்டத்தில் கிடைக்கிறது:

மின்னணு வாக்குப்பதிவு துவக்கம்	வியாழக்கிழமை, 05 டிசம்பர், 2024 அன்று காலை 9:00 மணி (இந்திய நேரப்படி)
மின்னணு வாக்குப்பதிவு நிறைவு	வெள்ளிக்கிழமை, ஜனவரி 3, 2025 அன்று மாலை 5:00 மணி (இந்திய நேரப்படி)

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி அதன் பிறகு CDSLஆல் முடக்கப்படும்.

இந்தக் காலக்கட்டத்தில், நவம்பர் 29, 2024 வெள்ளிக்கிழமை ("கட்ஆஃப் தேதி") அன்று காகித வடிவிலோ அல்லது டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட வடிவிலோ பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கலாம். ஒரு தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு உறுப்பினரால் அளிக்கப்பட்டவுடன், பின்னர் அவர் அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதி அதாவது நவம்பர் 29, 2024 வெள்ளிக்கிழமை அன்று, நிறுவனத்தின் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தின் அ